பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
02 12 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மலிவான விலையில் தரமான மருத்துவ வசதி கிடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தொவித்துள்ளார்.
- எதிர்க்கட்சிகள் அமளி காரணமாக நாடாடளுமன்றத்தின் இரு அவைகளும் இன்றும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.
- வளர்ந்து வரும் நாடுகளில் பிளாஸ்டிக் மாசுபாட்டை தடுப்பதற்கான முயற்சிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது.
- ஃபெஞ்ஜல் புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விரைந்து சீரமைக்க வேண்டுமென தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.
- 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஜப்பானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

<u>*------- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மலிவான விலையில் தரமான மருத்துவ வசதி கிடைப்பதற்கான முயற்சிகளை பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தொவித்துள்ளார்.,

புதுதில்லியில் இன்று காலை செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 2014-ஆம் ஆண்டு 387-ஆக இருந்த மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை தற்போது 780 மருந்துவக் கல்லூரிகளாக இருமடங்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

பிரதமரின் ஆயூஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் உலகிலேயே மிகப்பெரிய மருத்துவ திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் 12 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஐந்து லட்சம் ரூபாய் வரை மருத்துவ காப்பீட்டு நிதி உதவி பெற்று வருவதாகத் அவர் தெரிவித்தார்.

தற்போது இந்த திட்டம் 70 வயதுக்கும் மேற்பட்ட அனைவரும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவக் கட்டமைப்பை அனைத்து பகுதிகளிலும் சீரான அளவில் விரிவுபடுத்தவும், திறன்மிக்க மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும் அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

தரமான மருந்துகள் மக்களுக்கு தங்கு அடையின்றி கிடைத்திடவும், மருத்துவ பரிசோதனை வசதிகளைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த திரு மன்சுக் மாண்டவியா, புதிய மருந்துகளை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளையும் மத்திய அரசு ஊக்குவித்து வருவதாக குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

மணிப்பூர் சட்டம் ஒழுங்கு, உத்திரபிரதேச மாநிலம் சம்பல் வன்முறை மற்றும் தனியார் நிறுவன குழுமத்தின் முறைகேடு புகார் உள்ளிட்ட பிரச்சினைகளை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் எழுப்பியதால் இரு அவைகளும் இன்றும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தனியார் நிறுவன குழுமத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விவாதிக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

அவைத்தலைவர் திரு ஓம் பிர்லா கேள்வி நேரத்துக்குப் பின் இது குறித்து விவாதிக்கலாம் என தெரிவித்தார்.

எனினும் காங்கிரஸ், திமுக மற்றும் இடதுசாரி கட்சிகள் அவையின் மையப்பகுதிக்கு வந்து கோஷமிட்டனர்.

இதனால் மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவை இன்று காலை கூடியபோது எதிர்க்கட்சியினர் தனியார் நிறுவன குழுமத்துக்கு எதிராகக் கொண்டு வந்த ஒத்திவைப்பு தொடர்பான நோட்டீஸ்களுக்கு அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அனுமதி மறுத்தார்.

திமுக, சமாஜ்வாதி, காங்கிரஸ், ஆம் ஆத்மி மற்றும் இடதுசாரி கட்சிகள் மணிப்பூர் சட்டம் ஒழுங்கு நிலைமை மற்றும் உத்திரபிரதேச வன்முறை குறித்து விவாதிக்க அனுமதி கோரி அமளியில் ஈடுபட்டனர்.

அமளி நீடித்ததால் முதலில் மாநிலங்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்திவைக்கப்பட்டது.

[]<<<>>>[]

வளர்ந்து வரும் நாடுகளின் நீடித்த பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும் பிளாஸ்டி மாசுபாட்டை தடுப்பதற்கான முயற்சிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியா வலியுறுத்தியுள்ளது..

தென்கொரியாவின் பூசன் நகரில் நடைபெற்று வரும் அரசுகளுக்கு இடையேயான சமரச தீர்வுக் குழுவின் ஐந்தாவது கூட்டத்தில் இந்தியா சமர்ப்பித்துள்ள அறிக்கையில், ஒவ்வொரு நாட்டின் பிரச்சினைகளையும், மற்ற நாடுகள் தெளிவாக புரிந்து கொண்டு பிளாஸ்டிக் பயன்பாட்டை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பணியை ஆக்கப்பூர்வமாக மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது..

நாடுகளுக்கு இடையேயான பரஸ்பர நம்பிக்கையை உருவாக்க வேண்டியது அவசியம் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

அடிப்படை பிளாஸ்டிக் பாலிமர் உற்பத்தியை நெறிப்படுத்துவதற்கான நடைமுறைகளுக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்க முடியாத சூழ்நிலை நிலவுவதாகவும், இந்தியாவின் நிலைப்பாடு எவ்விதத்திலும் மற்ற நாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமையாது என்றும் அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் உள்ளிட்ட மாசுபாட்டை தடுப்பதற்காக வளர்ந்து வரும் நாடுகளுக்கு தாராளமாக உதவிடும் வகையில் நிதியம் ஒன்றை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இந்தியா அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

[]<<<>>>[]

தமிழக சட்டப்பேரவைக் கூட்டம் இம்மாதம் ஒன்பது மற்றும் பத்து ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் என்று பேரவைத் தலைவர் திரு அப்பாவு அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஃபெஞ்ஜல் புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விரைந்து சீரமைக்க சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாநில அமைச்சர்கள் சென்றுள்ளதாகவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தும் பணிகளை அவர்கள் மேற்கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

கடலூர் மாவட்டத்தில் அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வமும், திருவண்ணாமலை மாவட்டத்தில் திரு ஏ வ வேலுவும், தருமபுரி மாவட்டத்தில் திரு ஆர் ராஜேந்திரனும் நியமிக்கப்பட்டு மீட்பு நடவடிக்கைகளை பார்வையிட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்கு தாம் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு மக்களுக்கு உதவ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாவட்ட ஆட்சியர்களுடனும் தாம் தொடர்ந்து பேசி வருவதாகவும், பாதிப்புகளை விரைவில் சீர்செய்து இயல்பு நிலையை மீட்டெடுப்பதற்கான நடவடிக்ககள் எடுக்கப்பட்டுள்ளதகாவும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையினால் பாதிக்கப்பட்டவர்கள் 36 முகாம்களில் தங்க வைக்கப்பட்டு தேவையான உதவிகள் செய்து தரப்பட்டுள்ளதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஏ வ வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்ணாமலையார் மலையில் நேரிட்ட மண் சரிவில் சிக்கியுள்ள ஏழு பேரை மீட்பதற்கு சென்னை இந்திய தொழில்நுட்ப கல்வி

நிறுவனத்தின் பேராசிரியர்களும், ஏற்காட்டிலிருந்து சிறப்புக் குழுவினரும் வரவழைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மழை காரணமாக கீழ்ப்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம் பகுதிகளில் மழையினால் அதிக அளவில் பயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் திரு ஏ வ வேலு தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

கனமழை காரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் நீரில் மூழ்கியிருந்த தென்மாவட்டங்களுக்குச் செல்லும் ரயில்பாதையில் படிப்படியாக நீர் குறைந்ததை அடுத்து அப்பாதையில் ரயில் போக்குவரத்து மீண்டும் தொடங்கியுள்ளது.

சென்னையிலிருந்து அனந்தபுரி மற்றும் நெல்லை செல்லும் ரயில்கள் இயக்கப்படுவதாகவும், படிப்படியாக இதர ரயில்களையும் இயக்குவதற்கு தெற்கு ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேஷ் ) ---- 30 செகண்ட்*

**[]<<<>>>[]**

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கடந்த இரண்டு நாட்களில் அதிகபட்சமாக 23 சென்டி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக மலைப்பாதையிலும் அதிக அளவு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

முறிந்து விழுந்தமரங்களை அகற்றும் பணியில் பொதுப்பணித் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

பல இடங்களில் மின்தடையும் ஏற்பட்டுள்ளது.,

மாவட்ட நிர்வாகமும் நிலைமையை சீர் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் ஏற்காட்டுக்கு சுற்றுலாப்பயணிகள் வருவதை தவிர்க்குமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி பிருந்தாதேவி கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பாம்பாறு அணை நிரம்பியுள்ளது.

அணையிலிருந்து வினாடிக்கு 15 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுவதால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள பரமநேரி, மாரம்பட்டி, பரசநேரி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நீர் நிலைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகம் மீட்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

[]<<<>>>[]

தருமபுரி மாவட்டம் அரூர் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக வாணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அரூர் பகுதியில் வாணி ஆற்றின் கரையோரப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் தண்ணீர் புகுந்துள்ளது.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு வருவாய்த்துறை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரூர் - கடத்தூர் சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஜப்பானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

சார்ஜாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஜப்பான் முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதையடுத்து களமிறங்கிய இந்தியா சற்று முன் வரை -3 விக்கெட் இழப்புக்கு -220 ரன் எடுத்துள்ளது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில இன்று நடைபெறும் ஆட்டத்திரல் ஜாம்ஷெட்புர் - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

ஜாம்ஷெட்பூரில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**